# தமிழ் முரசு

**TAMOUL MOURASSOU**

முரசு 2
ஒலி 4
மாசி 1984

தமிழீழம் தவிர்க்கமுடியாதது




# புத்திஜீவிகள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்




தமிழ் முரசு - 28

## தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களின் சிந்தனைக்கு.

அவலத்தின் மத்தியிலே தமிழ் மக்கள் வாழ்ந்து செத்துக் கொண்டிருக்கிறார்கள். சிறீலங்கா அரசின் அடக்குமுறைத் தீ முன்னை விட வெகு வேகமாக இப்போது எம்மக்களைச் சுட்டுக் கருக்கிக் கொண்டு இருக்கிறது. பேச்சு வார்த்தை ஜாலங்களில் மக்களின் கவனத்தைத் திருப்பிவிட்டு தமிழீழத்தை மிணக்காடாக்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் சிறீலங்கா அரசு தமிழ் மக்களின் முதலாளித்துவத் தலைமையின் துணையுடன் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது. கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான நவீன ஆயுதங்கள் இறக்குமதி... அடக்குமுறை இராணுவத்துக்கு விசேட பயிற்சி... தொகுதிகள் தோறும் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி... தமிழ்ப் பகுதிகளிலெல்லாம் திட்டமிட்ட பேரினவாதக் குடியேற்றங்கள்... தினமும் புதிது புதிதாய் பதிக்கப்படும் அடக்குமுறைச் சட்டங்கள்.... என்றெல்லாம் தமிழ் மக்களை வேரோடு அழிப்பதற்கான சகல தயாரிப்புக்களையும் சிறீலங்கா அரசு செய்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி ஒட்டுமொத்தமாக அவர்களை அழித்து விட வேண்டும் என்ற கொள்கையில் அனைத்து பேரினவாத முதலாளித்துவக் கட்சிகளும் ஐக்கியப்படத் தொடங்கி விட்டனர்.

ஆனால் இத்தகைய காலகட்டத்தில்... தமிழ் மக்களிடையே ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பு சக்தியை முடுக்கி... விடுதலைப் போராட்டத்தை வேகப்படுத்த வேண்டிய தமிழீழ விடுதலை இயக்கங்களின் [illegible] எமக்கு வேதனையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் வெறுப்பையும்தான் அளிக்கிறது. ஆக்கிரமிப்பு முதலாளித்துவத்திற்கு எதிராக எம்மக்களை அணிதிரட்டி அவர்களின் சக்தியை உறிஞ்சி விடுதலைப் போராட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டிய விடுதலை இயக்கங்கள் இன்று வீதிகள் தோறும் மேடை போட்டு தமக்கிடையேயுள்ள பேதங்களையும், பிளவுகளையும் தம்பட்டமடித்தும், கருத்துவேறுபாடுகளை துப்பாக்கிகள் மூலம் தீர்க்க முற்பட்டும் மக்களிடையே வெறுப்பைத் தோற்றுவித்து அவர்களைப் போராட்டத்திலிருந்து விலக்கி தூரத்தில் தள்ளி நிற்கச் செய்கின்றன.

விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்துதலையும், முதலாளித்துவத்தின் சதிகளை அம்பலப்படுத்தி மக்களை விழிப்படையச் செய்வதையும் விடுத்து தமது குத்துவெட்டுக்களை அச்சகங்களிலே பதித்து ஆயிரக்கணக்கான பிரசுரங்களை வெளியிட்டு மக்களின் மனங்களில் வெறுப்பு வித்துக்களை விதைத்து விடுதலையை நாசம் செய்ய முற்படுகின்றன. இத்தகைய செயல்கள் எமது விடுதலைப் போராட்ட வரலாற்றின் கறுப்புப் பக்கங்கள் என்பதில் ஐயமே இல்லை.

இத்தகைய ஒரு துர்அதிர்ஷ்டமான நிலையில் விடுதலை இயக்கங்களை எம் மக்களின் சார்பில் நாம் மீண்டும் மீண்டும் வேண்டுவது இதனைத்தான். 'உங்கள் தியாகங்கள்... போராட்டப்பணிகள் மகத்தானவை... மறுக்க முடியாதவை என்பதில் எந்த வித மாற்றுக் கருத்தும் எமக்கில்லை. ஆனல் இன்னும் நீங்கள் விமர்சனங்களை ஏற்கக் கற்றுக் கொள்ளவில்லை. இயக்கம் என்ற குறுகிய வட்டத்தை உடைத்து மக்கள் என்ற சமுத்திரத்துள் கலக்கத் தயாராக இல்லை. எம் மக்களின் விடிவுக்காக உங்களால் ஐக்கியப்பட முடியாவிட்டாலும் பரவாயில்லை... உங்கள் பிளவுகளையும் பேதங்களையும் பெரிதாக எடுத்து விடுதலைப் போராட்டத்தை பின்னடைக்கும் செயற்பாடுகளை நிறுத்தி விடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவி தாயாருக்கு எழுதிய உருக்கமான கடிதம்.

அன்புள்ள அம்மா,

தாயாரின் பாசம் வலிமை மிக்கது என்பதை நான் உணராமல் அல்ல. பத்து மாதம் சுமந்து பாசமுடன் வளர்த்து விட்டு இப்போது பார்க்கையில் வயிறு பற்றி எரிகிறது என நீ என்னை வந்து பார்த்து விட்டு அழுதாய்.

எதிர்காலத்தில் தமிழனுக்கு தக்க பாதுகாப்பு நல்வாழ்வே கிடையாது. அவன் வாழ்வு பெற வேண்டும். அவன் தன் நிரந்தர விடிவுக்காக விடுதலை பெறவேண்டும் என்று உணர்ந்திருப்பாய்.

நீ தியாகப் போரில் குதித்திருப்பாயானால் இன்று நாம் எமது மரணத்துக்கான நாட்களை எண்ணிக் கொண்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. ஆனால் உன்னால் அது முடிந்திருக்காது. ஏனெனில் நீ இன்று அழுதது போன்று அன்று உன் தாயாரும் அழுதிருப்பாள். நீ அடங்கியிருப்பாய். இது ஒரு தொடர்கதையாக நீடிக்கக் கூடாது. எமது எதிர்காலச் சந்ததியும் எம்மைப் பார்த்து இதே கேள்வியைக் கேட்கக் கூடாது. இதனால்தான் நான் இந்தத் தியாகப் போரில் குதித்திருக்கிறேன்.

அன்பு மகள்

லலிதா.நடராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் வெகுஜனப் புரட்சிக்கான ஓர் முன்னெடுப்பே! ✸ ✸ ✸ ✸ ✸ ✸

காலம் காலமாக ஆக்கிரமிப்பு அரசும்... தமிழ் தலைவர்களும்(?) தூவி வருகின்ற வாக்குறுதி விதைகளை நாம இனியும் நம்பப்போவதில்லை... பேச்சு வார்த்தை வலைகளில் இனியும் சிக்கப்போவதில்லை... எங்களை நோக்கம் உறுதியானது மட்டுமல்ல இறுதியானதும் கூட. பேரினவாதத் தாக்குதல்களின் காரணமாக இடம் பெயர்ந்த தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் அவையிருக்கும் தமிழ்ப் பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமது படிப்பைத் தொடர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட இவ்வுண்ணாவிரதப் போராட்டம் விடுதலையின்பால் தமிழ் மாணவர்கள் கொண்டிருக்கும் உறுதியை மாத்திரமல்ல விரைவில் தமிழீழத்தில் புரட்சி வெடிக்கப் போவதையும் தெளிவாக்குகிறது.

ஆரம்பத்தில் (31.12.83 - சனிக்கிழமை முதல்) இடம் பெயர்ந்த மாணவர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக வளவில் [illegible] 25 பேர் கொண்ட குழுவினராக தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்தப் போராட்டத்தை ஆதரித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை வெளியிட்ட பிரசுரம்... "தமிழ்ப்பிரதேசமொன்றே தமிழ் மாணவர்களுக்கு பூரண பாதுகாப்பை ஏற்படுத்தும் என்பதை கடந்த கால அனுபவங்களிலிருந்து தெட்டத்தெளிவாக உணர்ந்ததால் சகல போதனா பீடங்களையும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீதியானதும் நியாயமானதும், முறையானதும்' என்ற வாசகங்களுடன், போராட்ட அமைப்பாளர்கள் இதை வெறும் மாணவர் போராட்டமாகக் கருதாது மக்கள் போராட்டமாக அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரியதும் இந்தப் போராட்டத்தின் பரந்த நோக்கத்தைத் தெளிவாக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.1.84 செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 2500 மாணவர்களும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து இடம்பெயர்ந்துவந்த மாணவர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதமிருந்தனர். இதே வேளையில் 4.01.84 புதன்கிழமை மட்டுநகர் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்படி கோரிக்கைகளை ஆதரித்து சுலோக அட்டைகளைத் தாங்கி சட்டங்களை அசட்டை செய்து ஊர்வலத்தை மேற்கொண்டனர்.

ஆனால் இந்தக் கோரிக்கைகளோ, போராட்டங்களோ எதுவுமே ஆக்கிரமிப்பு அரசின் காதுகளில் விழவில்லை. தமிழ்த்தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் கூட மாநிலசபை மயக்கத்தில் மூழ்கிக் கிடந்தனர். இத்தகைய கட்டத்திலேயே தமது கோரிக்கையை வலியுறுத்தி 'சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை' மேற்கொள்வது என்ற தீர்மானம் இடம்பெயர்ந்த மாணவர்களால் எடுக்கப்பட்டது. ஏற்கனவே கட்டம் கட்டமாக ஆரம்பித்து நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் நடந்து முடிந்தவுடன் இந்த உண்ணாவிரதப் போராட்டம் 9.01.84 திங்கள் காலை 11 மணிக்கு யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் ஆரம்பமாகியது. முதலில் 5 மாணவர்களும் 2 மாணவிகளும் போராட்டத்தில் பங்குபற்றினர். பின்னர் அவர்களுடன் யாழ். பல்கலைக்கழக மாணவியர் இருவரும் சேர்ந்து கொண்டனர். இவர்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழகத்தின் 2500 மாணவர்களும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர். யாழ். குடா நாடெங்கணும் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இந்த மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக கல்முனையிலும் தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டம் நிகழ்த்தப்பட்டது.

போராட்டத்தீயின் உக்கிரம் மெல்ல மெல்லச் சுட்டுத் தகிக்க ஆரம்பித்தது. உண்ணாவிரதத்தின் நான்காவது தினமான திங்கட்கிழமை (11.1.84) உண்ணாவிரதிகள் சோர்ந்துபோய் படுக்கைநிலையிலிருக்க யாழ் நகரின் மையத்தில் பல்கலைக்கழக மாணவர்களும், இடம்பெயர்ந்த மாணவர்களுமாக 4000 பட்டதாரி மாணவர்கள் ஆக்கிரமிப்பு அரசின் சட்டங்களையெல்லாம் தூக்கியெறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை மேற்கொண்டார். இவ்வூர்வலத்தை பொலிசார் இடையில் தடுத்து நிறுத்திய போது மாணவர்கள் வீதியிலேயே இருந்துவிட்டனர். மாணவர்களின் உறுதி, பொலிசாரை பின்வாங்க வைத்து ஊர்வலத்தைத் தொடர வைத்தது. மாணவர்களின் உணர்ச்சியும் உறுதியும் மிக்க இந்த ஊர்வலம் ஆக்கிரமிப்பு அரசின் சட்டங்கள் தமிழீழத்தில் தோற்றுப் போக ஆரம்பித்து விட்டதை தெளிவாக்கியதுடன் மக்களின் மனங்களில் வெகுஜனப் போராட்டத்துக்கான வித்துக்களைத் தூவியது.

மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்ட நடவடிக்கைக்கு ஆதரவாக 12.1.83, 13.01.83 இரு தினங்களிலும் குடாநாடெங்கும் ஹர்த்தால் நிகழ்த்தப்பட்டது. இவ்விரு தினங்களிலும் குடாநாடே வெறிச்சோடி ஸ்தம்பித்திருந்தது. இப்போராட்டத்தில் மக்கள் கொண்ட உறுதியை, கட்டுப்பாட்டை, ஆதரவை தெளிவாக்கியது. அதே வேளையில் கொட்டும் மழையையும், காற்றையும் பொருட்படுத்தாது தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு உண்ணாவிரதிகளைப் பார்வையிட்டு ஆதரவளித்து ஆறுதல் கூறிச் சென்று கொண்டேயிருந்தனர். இத்தறுவாய காலகட்டத்தில் 'மாநில சபை' மயக்கத்தில் மூழ்கியிருந்த அமிர்தலிங்கமும், சிவசிதம்பரமும் மேற்படி மாணவர்களை உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடும்படியும் இது தொடர்பாக அரசுடன் பேச்சுவார்த்தை நிகழ்த்தும்படியும் கோரியிருந்தனர். ஆனால் இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த மாணவர் அவை 'தமது கோரிக்கை நிறைவேறும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்றும், தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நம்பி ஏமாறத் தயாரில்லை என்று உறுதியாகச் சொன்னதுடன் 'எங்கள் சாவை அமிர், சிவா அரசுடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதை மட்டும்தானா மதிக்கின்றனர்?' என்று கேள்வியும் எழுப்பியிருந்தது.

அதேவேளையில் உண்ணாவிரதத்தின் ஏழாவது நாள் உண்ணாவிரதிகளின் உடல் நிலை மிக மோசமடைய ஆரம்பித்தது. விவசாய பீட பட்டதாரி மாணவன் இளவேந்தனையும், பொறியியற் பீட பட்டதாரி மாணவர் இளவேந்தனையும் உடல்நிலை மோசமாகியது. வாந்தியெடுக்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவர்கள் மயங்கியபோதும் வைத்திய பரிசோதனைக்கு உட்பட மறுத்துவிட்டார்கள். மேற்படி உண்ணாவிரதிகளின் பெற்றோர், உறவினருடன், ஆயிரக்கணக்கான பொதுமக்களும் கண்ணீர் மல்கி, கவலையுடன் அவர்களைச் சுற்றிக் காணப்பட்டனர். அதேவேளையில் மேற்படி போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வடமராட்சி, மட்டுவில், ஆவரங்கால், மானிப்பாய், கொடிகாமம், இணுவில் போன்ற சிற்றூர்களெங்கும் மாணவர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். அனைத்தும் சிறமாக 19 தொழிற்சங்கங்கள் மேற்படி போராட்டத்துக்கு ஆதரவாக தினமும் இருமணிநேர மறியற் போராட்டம் நிகழ்த்தப் போவதாக அறிவித்தன.

மாணவர் அவையின் கோரிக்கையை ஏற்றுத் தமிழ் மக்கள் பொங்கல் திருநாளை (15.01.84) துக்கதினமாக அனுஷ்டித்தனர். கடைகளிலும், வீடுகளிலும், வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. உண்ணாவிரதிகளின் உடல்நிலை தொடர்ந்து மோசமடைந்து சென்றது. சுற்றியிருந்த மக்கள் பெருஞ்சோகத்தில் மூழ்க தமிழ் ஈழத்தின் கிராமங்கள் தோறும் எதிர்ப்பு இயக்கங்கள் புதுநம்பிக்கையுடன் வெடித்துக் கிளம்ப ஆரம்பித்தன. 16.01.84 திங்கட்கிழமை 19 தொழிற்சங்கங்களும் இரு மணித்தியால மறியற்போராட்டத்தை ஆரம்பித்தன. அதே வேளையில் அக்கிரம அரசு யாழ். பல்கலைக் கழகத்தை மூடும் அறிவித்தலைப் பிறப்பித்தது. 19 தொழிற்சங்கங்களின் மறியற் போராட்டம் நடைபெற்ற வேளையில் யாழ் நகரவீதிகளில் வாகனங்கள் அனைத்தும் முன்னே செல்ல முடியாது நிறுத்தப்பட்டு போராட்டத்துக்கு ஆதரவாக 'ஹோர்ன்' ஒலியை எழுப்பிக்கொண்டிருந்தன. அச்சுவேலி, புன்னாலைக்கட்டுவன், நீர்வேலி என்று கிராமங்கள் தோறும் முதியோர், மகளிர், மாணவர் என நூற்றுக்கணக்கானோர் ஆதரவு உண்ணாவிரதங்களை அனுஷ்டித்தனர்.

17.1.84 திங்கட்கிழமை இரவு 8.20 மணி. உண்ணாவிரதிகள் சோர்வுற்ற நிலையில் சாய்ந்திருக்க சுற்றவர பக்திப் பாடல் ஒலிக்க... மக்கள் சோகத்தில் மூழ்கியிருக்கின்றனர். இரு உண்ணாவிரதிகளின் உடல்நிலை மிக மோசமாகிவிட்டது. ஒருவரின் நாசியிலிருந்து இரத்தம் வர ஆரம்பித்தது. மாணவியின் உடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையைப் பரிசோதித்த பல்கலைக்கழகப் பேராசிரியர் 3 மணித்தியால அவகாசம் கொடுத்து விட்டார். அடுத்து வரும் சந்தர்ப்பத்தில் இருக்க... மாணவர்தலைவர்கள் அடுத்த நடவடிக்கை பற்றி ஆலோசிக்க... அந்த நேரத்தில் அவ்விடத்துக்கு இருவாகனங்களில் வந்த துப்பாக்கி ஏந்திய இளைஞர்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் 9 உண்ணாவிரதிகளையும் அவர்களுக்கு உதவிபுரிந்த 3 தாதிமாரையும் கடத்திச் சென்று விட்டனர். இவர்களில் தாதிமார் வழியில் இறக்கி விடப்பட்டனர். உண்ணாவிரதிகள் எங்கேயென்று தெரியவில்லை. ஆனால் அவர்கள் நலமாக இருப்பதாக கடத்திய இயக்கம் பிரசாரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதே வேளையில் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள பல்கலைக்கழக மாணவர் அவை உண்ணாவிரதிகளுக்கு ஏற்படும் பாதகத்துக்கு மேற்படி கடத்திய இயக்கமே பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறியுள்ளதுடன் விரைவில் அடுத்த போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் அதற்கு மக்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்றும் வேண்டியுள்ளது.

உண்மையிலேயே தமிழ் இனமும் துர் அதிர்ஷ்டமும் ஒன்றாகத்தான் பிறந்திருக்கின்றன. மக்களைச் சுற்றியிருந்த மாயத்திரைகள் விலகி, அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிராக நாம் துணிவுடன் ஒன்றுபட்டுப் போராடலாம் என்ற புது நம்பிக்கையுடன் எம் மக்கள் விழித்தெழுந்த வேளையிலே... கிராமங்கள் தோறும் விஸ்தரிக்கப்பட்டு, மாணவர்கள்... தொழிலாளர்கள்... மக்கள் என்று பின்னிப் பிணைந்து வெகுஜனப் போராட்டமாக உருவெடுத்த இப்போராட்டம் திசைதிருப்பப்பட்டது விசனத்துக்கு உரியது மாத்திரமன்றி எம்மினத்தின் தலைவிதியை நாமே மீண்டும் நொந்து கொள்ளச் செய்கிறது.

"கதிகலங்கிக் கைகட்டி குழைந்து கூத்தாடி
கும்பிட்டு மெய்யாய் பொங்கி பணிந்து
போவோமா? பலிக்கடாவாகுவோமா?"

- பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ...தமிழக... சிறீலங்கா,செய்திகள்

## தமிழ் மக்களை மீண்டும் கொன்று குவிப்பதற்கான தயாரிப்புக்களில் சிறிலங்கா பேரினவாதம்....

தமிழ் மக்களை மீண்டும், மீண்டும் கொன்றழித்து ஈழத் தமிழினத்தையே நிர்மூலமாக்குவதற்கான தயாரிப்பு வேலைகளில் ஆக்கிரமிப்பு அரசும், சிறிலங்காவின் பேரினவாதிகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக பெருந்தொகையான இராணுவத் தளபாடங்களை சிறிலங்கா அரசு இறக்குமதி செய்துள்ளது. பாகிஸ்தானிலிருந்து 500 கவச வாகனங்களையும் (500 armourd cars), நேட்டோ நாடுகளிலிருந்து நூற்றுக்கணக்கான இரவுப்பார்வையுடன் கூடிய துப்பாக்கிகளையும், SMG, LMG இயந்திரத் துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், பெருந்தொகையான வெடிமருந்துகள் ஆகியவற்றையும் இறக்குமதி செய்திருக்கிறது சிறிலங்கா அரசு.

இது தவிர மின்னேரியாவில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் அரசின் ஆதரவோடும் 13 பௌத்த சங்கங்களின் துணையோடும் தொகுதிகள் தோறும் 5000 வீதம் ஏறத்தாழ இரு இலட்சம் சிங்கள இளைஞர்களுக்கு விசேட ஆயுதப்பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இது தவிர சிறீலங்கா ஆயுதப்படைகளுக்கு விசேட அதிகாரங்களையளிக்கும் வகையில் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. இவை யாவும் ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி தமிழினத்தை நிர்மூலமாக்க சிறிலங்கா பேரினவாதம் எடுக்கும் முயற்சியின் ஒருபடியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ○ சர்வகட்சி மாநாடு தோல்வி?

தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக(?) இந்திய அரசின் அனுசரணையுடன் சிறிலங்காவில் நடைபெற்ற சர்வகட்சி மாநாடு தீர்வேதும் காணாமல் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதும் உண்மையிலே தோல்வியடைந்துவிட்டதாகக் கருதப்படுகிறது. ஆரம்பத்தில் இம்மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி பின்னர் கலந்து கொண்டது. ஆனால் முதலில் மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணி பின்னர் வெளிநடப்புச் செய்தது. தமிழ் மக்களின் சார்பில்(?) தமிழர் கூட்டணியுடன் தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்களுக்கு அல்லல் ஏற்பட்ட போது முகவரியே இல்லாமல் மறைந்திருந்த தமிழ்க் காங்கிரசும், இ.தொ.க, ஜ.தொ.கா வும் கலந்து கொண்டன. பெயரளவில் கூட தமிழ் மக்களுக்கு எந்தவுரிமையும் வழங்க சிறிலங்காவின் பேரினவாதிகள் தயாராகவில்லை என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. 'பூரண பாதுகாப்புடன்' பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட கூட்டணியினர் மீண்டும் தமிழகத்துக்கு அரசியல் அஞ்ஞாதவாசத்தை மேற்கொள்ளத் திரும்பி விட்டனர்.

## ☆ பொலிசார் இருவர் புலோலியில் சுடப்பட்டுக் கொலை!

11.1.84 புதன்கிழமை க.பொ.த.ப. தாயகணித விடைத்தாள்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஜீப் வண்டியொன்றின் மீது துப்பாக்கி ஏந்திய ஐந்து இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஜீப்பினுள் இருந்த உடுப்பிட்டி, கரவெட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த இரு கான்ஸ்டபிள்கள் கொல்லப்பட்டனர். மேற்படி ஜீப்பில் சென்ற ஆசிரியர் இருவர் காயமடைந்தார். இச்சம்பவத்தையடுத்து இப்பகுதியில் நிலைமை பதட்டமடைந்திருந்த போதும் தற்போது நிலை சாதாரணமடைந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ☆ இலங்கையின் வரலாற்றில் மிகப் பெரும் வங்கிக் கொள்ளை!

இலங்கையின் வரலாற்றில் மிகப்பெரும் வங்கிக் கொள்ளை காத்தான்குடியில் நடைபெற்றுள்ளது. 13.1.84 வெள்ளிக்கிழமை காலை 8.15 மணியளவில் துப்பாக்கி ஏந்திய ஆறு இளைஞர்கள் மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களையும் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் துப்பாக்கி முனையில் துணிகரமாகக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். திட்டமிட்டு வெகு கச்சிதமாக நிகழ்த்தப்பட்ட இக்கொள்ளை பற்றி இதுவரை எந்தச் சரியான தகவலும் சிறீலங்கா பொலிசாருக்குக் கிடைக்கவில்லை.

## கரவெட்டியில் அப்பாவித் தமிழ் இளைஞர் சிறீலங்கா பொலிசாரால் சுட்டுக் கொலை!

20.1.84 வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் கரவெட்டி தபாற்கந்தோருக்கு அருகாமையில் அப்பாவித் தமிழ் இளைஞர் இருவர் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். புலோலியைச் சேர்ந்த 19வயது நிரம்பிய இந்த இளைஞரின் பெயர் சிவராமலிங்கம் ராஜ்மோகன் ஆகும். இவரது சடலத்தைப் பொறுப்பேற்ற உறவினர்களை உடனடியாக சடலத்தை அடக்கம் செய்ய வேண்டுமென்றும், மரண ஊர்வலத்தில் 25பேருக்குமேல் கலந்து கொள்ளக் கூடாது என்றும் பொலிசாரினால் கண்டித்து எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்கள்.

## ரகலயில் தோட்டத் தொழிலாளர்கள் மீது பேரினவாதக் காடையர் வெறியாட்டம்..

ரகல விடல்பேல் தோட்டத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்களது குடியிருப்புக்கள் பேரினவாதக் காடையர்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டதுடன் தொழிலாளர்கள் தாக்கப்பட்டு அவர்களது உடைமைகளும் சூறையாடப்பட்டுள்ளன. வெறிகொண்டிருக்கும் பேரினவாதிகள் சமீபகாலங்களில் தமது வெறிக்குத் தோட்டத் தொழிலாளர்களைப் பலியாக்கி வருவது தெரிந்ததே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ☆ கொள்ளை.... குண்டுவெடிப்பு ... துப்பாக்கிச்சூடு!

3.1.84 செவ்வாய் இரவு இனந்தெரியாத துப்பாக்கி ஏந்திய வாலிபர்கள் யாழ். இருநகர் மேல்நிலைக் கூட்டுத்தாபனத்திலிருந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சக்திமிக்க இரு 'வயர்லெஸ்' கருவிகளைக் கொள்ளையடித்துள்ளனர்.

10.1.84 செவ்வாய் இரவு வான் ஒன்றில் வந்த துப்பாக்கி ஏந்திய 7 இளைஞர்கள் யாழ். கடற்கரை வீதியில் உள்ள சாங்க இலங்கா அலுவலகத்திலிருந்து இரு துப்பாக்கிகள், படி இயந்திரங்கள் உட்பட பெருந்தொகை பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துள்ளனர்.

இனந்தெரியாத இளைஞர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு மட்டுநகர் மாநகரசபையின் ஐ.தே.க உறுப்பினர் ஜோப்.பாறுக் சின்னலெப்பை உள்ளாகி படுகாயமடைந்தார்.

12.1.84. யாழ். நகரில் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தாலின் போது யாழ். மத்திய பஸ்நிலையத்திலும், மத்திய சந்தையிலும் இருகுண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன.

16.1.84 இல் யாழ். கட்டடத்திணைக்களத்திற்கு சொந்தமான ஜீப்வண்டியொன்று இளைஞர்களால் தீவைத்து எரியூட்டப்பட்டது. இதே தினம் யாழ். கச்சேரியிலும் வெடிகுண்டொன்று வெடித்தது. இதுபோல திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ஜீப்பொன்றும் இத்தினம் இளைஞர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

சிறீலங்கா அரச இயந்திரம் தமிழீழத்தில் தகர்க்கப்படத் தொடங்கிவிட்டதை மேற்படி சம்பவங்கள் தெளிவாக்குகின்றன.

## ○ சிறீலங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் பிளவு!

எதிர்க்கட்சியாகிய சிறீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தி பலவீனப்படுத்தும் முயற்சியில் ஆளும் ஐ.தே. கட்சிக்கு மீண்டும் வெற்றி கிட்டியது. இம்முறை சிறீமாவோ பண்டாரநாயக்காவின் மருமகன் விஜய குமாரதுங்க, மகள், முன்னாள் அமைச்சர் ரி.பி. இலங்கரத்தின ஆகியோர் கட்சியிலிருந்து பிரிந்து மகாஜனக் கட்சி என்ற கட்சியை உருவாக்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தி ஜீவிகள்?

தமிழீழப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் ஒட்டுமொத்த சக்தி அத்தனையையும் கூட்டிக் குவித்து ... புரட்சியிலே சொரிந்து, பல தசாப்தங்கள் தொடர்ந்து ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் வரலாற்றுப்பணியை பூர்த்தியாக்குவதிலே புத்திஜீவிகளின் பங்கு ஒப்புவமை இல்லாத ஒன்றாகும். பிரபலிக்கமான பிரச்சாரக் கருவிகள் வெகுஜனங்களைக் கற்பழித்து ... அவர்களது கன்னிச் சிந்தனைகள் கசக்கியெறியப்பட்டு நிறைவேற முடியாத ஆசைகளாலும் ... கற்பனைகளாலும் தம்மை நிரப்பி எதிர்பார்த்து .... எதிர்பார்த்து ஏமாறுவதே வாழ்க்கையின் இயற்கை நியதி யென்றிருக்கிறார்கள். வாழ்ந்து கொண்டிருக்கிற சமுதாயத்திலே முரண்பாடுகள் திரண்டு, சாந்தமான வாழ்வும் தானும் தன்பாடும் என்ற வாழ்வும் திடீரெனப் பாதிக்கப்படும் போது அதை எழுந்தமானச் செயலினால் நிவர்த்திக்க முயற்சிக்கிறார்கள் அன்றேல் அதற்குள்ளும் வளைந்து கொடுத்து வாழ முயற்சிக்கிறார்கள். இன்று பிரச்சனைகள் நித்தியம் வெளிக்கிளம்பத் தொடங்கிய போது எதிரியை நிரந்தரமாகத் தோற்கடிக்கும் சக்தியைத் திரட்ட யோசிக்கிறார்கள். இவர்களை அரசியல் கலைஞர்களாக, அரசியல் மேதாவிகளாக்க, அரசியல் மூடநம்பிக்கையற்றவர்களாக்க முடியுமா?

மிகக் கஸ்ட்டமானதும் சிக்கல் நிறைந்ததுமான உயர் கனிதங்களை, உயிரியல் இரசாயனத்தை, உடற் தொழியிய லைக் கற்கும் வல்லமை பெற்றவர்கள் சமூக விஞ்ஞானத்தைக் கற்க்கவல்லமையற்று இருக்கிறார்கள். உலகத்தில் எந்த மற்ற இனத்திலும் பார்க்க விகிதாசாரத்தில் கூடிய எண்ணிக்கையை கொண்ட எழுத

வாசிக்கத் தெரிந்த பரந்தளவிலான புத்தி ஜீவிகளை விடுதலை இயக்கத்தைச் சூழ அணி திரட்ட வேண்டும்.

பொறியியற் பட்டம் பெறவோ, மருத்துவர் பட்டம் பெறவோ மூளையை அலட்டியவர்கள், தமது கல்வியை முடித்துக் கொண்டு தென்னிலங்கையிலே வேலை செய்யும்போது, அவர்களுக்கு உயிராபத்தை விளைவிக்கக் கூடிய இனக்கலவரத்தைக் கொண்டுவருபவர்களை கட்டுப்படுத்த வல்லமையற்றவர்களாகவே இருக்கிறார்கள். கடந்த காலத்திலே பொருளாதார சுபீட்சம் தரக்கூடிய துறைகளிலே புலமை பெறுவதற்காக மூளையை கசக்கிப் பிழிந்தவர்கள், ஒன்றில் தென்னிலங்கையிலே பயத்தோடும் பீதியோடும் வேலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள் அ.ன்றேல் வெளி நாடுகளிலே வேண்டாப் பிரஜைகளாகவோ அன்றேல் சமூகம் தரும் சுகவய இன்பங்களை ஒறுத்து காசை உருவாக்கும் அசையும் ஜடங்களாகவோ வாழ்கிறார்கள்.

மூளையை அபிவிருத்தி செய்ய வல்லவர்கள் விடுதலைக்கு வழிகாட்ட வல்ல தத்துவார்த்தத் துறையிலே ஆவாம வரம்பெற்று அந்தத் துறையிலே புலமை பெறப் பிரயத்தனம் எடுக்க வேண்டியது இன்று மிக அத்தியாவசியமான ஒன்றாகிவிட்டது. தமிழ் மக்கள் தமிழ் ஈழத்தை வென்றிட நிர்ணயமெடுத்தபின்பு, தமிழ் இளைஞர்கள் ஒர் புதிய தன்னம்பிக்கையைப் பெற்றார்கள். அவர்கள் இன்னும் கூடிய அரசியல் அநுபவம் பெற்றவர்களாகி, இன்னும் தமிழ் மக்கள் சற்று இறுக்கமாகவும், நறுக்காகவும் அணிவகுக்கப்பட்டிருந்தால்தான் ஆளுகின்ற ஐ.தே.க.அரசாங்கத்தின் ஆயுத பலம் ஒரு பெரும் சவாலாகி விடாது. விடுதலை அதன் சாரம்சத்தில் சமூகத்தில் சர்வ வியாபகமாகத் தோன்றும் ஓர் எண்ணக் கருவாகும். ஒடுக்கு முறை சீராகவும், நித்தியமாகவும், சர்வ வியாபகமாகவும் நிகழும் போது, பரந்துபட்ட தமிழ் மக்களின் சிந்தனை முறைகள், செயல் வடிவங்கள் ஏகவினமற்றுப் போனதை அறிவு ஜீவிகள் அறிவுத்திறனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்துவதில், சீராக்குவதில், நெறிப்படுத்துவதில் போதிய பங்களிப்பைச் செய்யாமையே.

இன்று தமிழ் இனம் தொடர்ந்து ஓர் இனமாக தப்பிப் பிழைக்க வேண்டுமென்றால், தமிழினத்தின் எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களின் கையிலேயே தங்கியுள்ளது. அவர்கள் சமூக விஞ்ஞானத்திலே, அரசியல் பொருளாதாரத்திலே, தத்துவ வரலாற்றிலே அவா வரப் பெற்று, அவற்றிலே பேர் புலமை பெறப் பெற்று அதன் மூலம் தமிழ் மக்களின் பரந்துபட்ட பகுதியினரை அரசியலின் பெயரால் அணிவகுத்து விஞ்ஞான முறைப்படி போராட வைக்க வேண்டும்.

ஓ! புத்தி ஜீவிகளே, நீங்கள் கௌரவமான குடும்பங்களில் பிறந்தவர்கள்தான், வசதியான பாடசாலைகளிலே கல்வி பயின்றவர்கள்தான், அழுக்கற்ற ஆடையணிந்த மிக நாகரீகமான மனிதர்களோடுதான் நாளும் பழகியவர்கள். இன்று கோடிக்கணக்கான வருடங்களாக வளர்த்தெடுக்கப்பட்ட நாகரீகம் சாக்கடையிலே வீசப்பட்டு காட்டுமிராண்டித்தனம் தமிழீழத்தில் தாண்டவமாடவில்லையா? உங்கள் பணி இங்கே ஒன்றும் இல்லையா? தமிழ் மக்கள் எல்லோருக்கும், உங்களுக்கும் வீடுகள் சொந்தத்தில் இருக்கின்றன, அந்த வீடுகள் நீங்கள் சொந்தம் கொண்டாட உரிமை மறுக்கப்பட்ட நாட்டில் அமைந்திருக்கின்றன. நீங்கள் நாகரீகமான நடையுடை பாவனையுடையவர்கள். இலக்கணம் வழுவாத மொழியையேமிகவும் மிருதுவாகப் பேசுபவர்கள்: ஐரோப்பா நாட்டு ஏதாவது தூதரகத்துக்குச் சென்று விசா கேட்டுப் பாருங்கள், உங்களில் எத்தனை வீதமானோரை அவர்கள் மனிதர்களாக அங்கீகரிப்பார்கள் என்பதனை நீங்கள் அறிவீர்கள். இப்பேர்ப்பட்ட விடயங்களை நீங்கள் சிந்திக்க மறந்து விடுகிறீர்கள். இப்பேர்ப்பட்ட சிந்தனைகள் உங்களுக்கு இயல்பாக வரத் தவறி விடுகின்றன. உங்களுக் கோர் நாளாந்த வாழ்க்கை அமைந்து விட்டது அல்லது அமைக்கப்பட்டு விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது . இந்த வாழ்க்கை முறையானது ஐ.தே.க.போன்ற கட்சிகளாலும் மற்றும் காலாவதி ஆகிவிட்ட சமூக ஸ்தாபனங்களாலும் தட்டி நிமிர்த்தி சீர் செய்யப்படவில்லையா? இன்றைய உக்கி உளுத்து கிமடு தட்டிப் போன இலங்கைச் சமுதாயம் போதித்துப் பயிற்றியெடுத்ததற்கேற்ப ஆத்மீக சுதந்திரம் பெற்றவர்கள் நீங்கள் . ஏதோ வயிற்றுச் சோற்றிற்காகவோ அன்றேல் உயிர் தப்புவதற்காகவோ உங்களது ஆத்மாவை இந்த அரசமைப்பிடமோ சமுதாய அமைப்பிடமோ அடைவு வைத்து விட்டீர்கள் அல்லது இன்றைய சமூக நெருக்கடிகள் உங்களைச் செத்துச் செத்து வாழ வைக்கின்றன.

இன்றைய வரலாறு உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தர இருக்கிறது. உங்கள் வாழ்வு அவமாகக் கழியாத வாழ்வாக அமைய வேண்டுமென்றால் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீங்கள் மீளா அடிமைகளாக அடிமைச் சாசனம் எழுதிவிடுங்கள். அவர்களுக்காக எழுதுங்கள்...; அவர்களுக்காக வாசியுங்கள். அவர்களிடம் பிச்சையெடுத்து உங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டு பரந்துபட்ட தமிழ் மக்களின் அரசியல் ஞானத்தை உயர்த்தும் தொழிலைப் பாருங்கள் .

தமிழ் மக்களுக்கு ஆத்ம சுத்தியோடு அரசியல் தொழில் செய்யும் அறிவு ஜீவிப் பகுதியினர் ஒருவருமே இல்லை தமிழ் மக்களுக்கு கடந்த கால அரசியல் அனுபவங்களைப் பருக்கும் வேலையைப் பார்ப்பதில் நீங்கள் ஆத்ம திருப்தி காண மாட்டீர்களா?.


கடந்த கால உயர்ந்த தத்துவங்களை தமிழ் மக்களுக்கு ஊட்டும் தொழிலிலே நீங்கள் பேரின்பம் காண மாட்டீர்களா? தமிழ் மக்களின் அரசியல் அறிவை உயர்த்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி அரசியல் அறிவில் உயர்ந்தால் தமிழ் மக்கள் தாமே
ஒற்றுமைப்பட்டு அணி திரளுவார்கள் . அதைக் காணும் போது
பேரின்பம் எய்த மாட்டார்களா? உலகம் பரந்த பண்பாட்டியக்
கமான சோசலிசத்தின் உண்மை முகத்தை தமிழ் மக்களுக்கு கா
ட்டுவதற்காக அரசியலைத் தொழிலாக எடுங்கள் .அந்த வாழ்
க்கை அவமாகக் கழிந்த வாழ்க்கையாகாது . மற்றவர்கள் பா
டுபட்டு எடுத்ததை ஒட்டுண்ணி போல் அனுபவித்த வாழ்க்கையா
காது . எதிர்கால சமுதாயத்துக்காக எமது மூளையையும் உட
லையும் இயக்கினோம் என்ற பெருமையோடும், பெரும் நிம்மதி
யோடும் சாவோம்.

---

நான் கண்ட சொர்க்கம்




நன்றி: துக்ளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL MOURASSOU

MURASU 2 * FEVRIER -- 1984 * OLY-- 4

## LES TAMOULS ETUDIANTS DE L'UNIVERSITE CONTINUE LEURS PROTESTATIONS POUR VAINCRE LEUR DEMANDE

Le gouvernement de Srilanka n'a pas pris les actions pour sauvegarder les étudiants qui ont échappé de l'émute communalistes en juillet '83. Les étudiants ont démandé le gouvernement Srilankais pour transferer aux universités dans le nord et l'est de Srilanka de l'université dans les régions cingalais. Le gouvernement n'a pas consideré leurs demande mais il leur menace à lincencier de l'université.

Les étudiants ont commencé une grève de la faim à Jaffna dans le nord, jusqu'à ce que le gouvernement satisfait leur demande. Les étudiants qui continuent leur études dans les régions tamouls boycottent leur cours pour supporter la demande des étudiants fréquenant les universités dans les régions cingalais. Il y avait une grève publique dans les régions tamoul pour supporter la demande des étudiants. Mais le gouvernement menace continuellement les étudiants.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LE GOUVERNEMENT DE SRILANKA CONTINUE DE DETRUIRE LA NATION DE TAMOULE

Plus de 40,000 cingalais ont colonisé illégalement dans les régions tamouls après communalistes en juillet 1983. Les forces armées et les fonctionnaires ont aidé les cingalais pour coloniser illégalement dans les régions tamouls. Les tamouls qui ont vécu dans ces régions ont été chassé par les cingalais avec les aides de gouvernement armées. Après avoir colonisé illegalement les cingalais, le gouvernement a commencé de développer ces régions. Le gouvernement toujours essaie de détruire la nation de tamoule par colonisation de cingalais dans les régions de tamouls.

## LA CONFERENCE DE TOUS LES PARTIS DE SRILANKA

Après plusieurs efforts du gouvernement indien, le président du Srilanka à decidé pour avoir la conférence de tous les partis. Il avait invité pour la première fois tous les partis sauf les partis interdit et front uni de libération de tamoul (FULT). Il n'avait pas invité FULT parceque FULT demande la séparatisme. Mais tous les partis ont demandé le président pour inviter le FULT parcequ'il représante les tamouls.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Après leur demande, le président a invité FULT pour participer dans la conférence. Mais le président, le sécretaire et plusieurs députés anciennes de FULT sont resté en inde depuis l'émutes communalistes en juillet 1983 parcequ'il n'y a pas de sécurité pour leurs à Srilanka. Ils ont demandé le gouvernement indien pour assurer leur sécurité. Il est très claire qu'il n'y a pas de sécurité pour les tamouls.

L'association de buddhist a demandé le gouvernement pour participer dans cette conférence. Le président ne pouvait pas refusé la demande de l'association de buddhist parcequ'ils sont majorité dans Srilanka. Les autres associations de different communités ont demandé le président pour participer dans la conférence. Enfin, le président a invité toutes les associations de different communautés.

Après avoir participé pour trois jour, le front uni de peuple parti boycote la conférence. L'association de buddhist aussi a boycotté la conférence. Dans cette circonstance, il n'est pas possible pour avoir une solution pour les problèmes de tamouls dans cette conférence.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LE GOUVERNEMENT DE SRI LANKA FERME LES CAMPS DES REFUGIES

Le gouvernement contrainds les réfugiés qui sont arrivés aux camps pendant l'émutes communalistes en juillet 1983, à quitter de camps. Les réfugiés ne donnent pas reguliérement pour manger dans les camps. Plusier réfugiés sont malades, mais ils ne sont pas donné propre médicaments. Plusieur réfugiés ont perdus leurs parents, les énfants ou leur possessions pendant l'émutes communalistes. Plus mille réfugiés ont été pris par les force armées de camps et mis dans les régions cingalais qui ne sont pas sécurité pour les réfugiés. les réfugiés veulent aller aux régions tamoul, mais le gouvernement n'envoie pas les réfugiés aux régions tamoul Le gouvernement toujours essaie de detruire la nation de tamoul.

## L'UNIVERSITE DE LA REGION NORD A ETE FERMEE

Les étudiants de cette université boycottent leur cours pour supporter la demande des étudiants fréquentent les universités dans les régions cingalais. Le gouvernement n'a pas pris les efforts pour resoudre les problèmes de tamouls étudiants, mais il avait fermée l'université. Le gouvernement essaie de supprimer l'éducation de tamoul étudiants

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1983 = 1983 = 1983

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக நடந்த 1983ம் ஆண்டு நிகழ்ந்த சில முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு. இது சென்ற இதழின் தொடர்ச்சி....

★ 29.04.83: உள்ளூராட்சித் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும்படி கோரிய விடுதலைப் போராளிகளால் சாவகச்சேரி நகரசபை ஐ.தே.க வேட்பாளர் முத்தையா, பருத்தித்துறை நகரசபை ஐ.தே.க. வேட்பாளர் இரத்தினசிங்கம், யாழ். மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளரின் செயலாளர் இராஜரத்தினம் ஆகியோர் சில மணிநேர இடைவெளிகளில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

● 1.06.83: குமார் எனப்படும் சிதம்பரநாதன் வவுனியாவில் வைத்து இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

● 30.05.83: வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞர் பழனிவேல் சிறிலங்கா இராணுவத்தால் கோரத்தனமாகக் கொல்லப்பட்டார்.

● 15.07.83: மீசாலை புகையிரத நிலையத்துக்கு அருகில் வைத்து சிறிலங்கா இராணுவம் இளைஞர்கள் இருவரை சுட்டுக் கொன்றது. இதில் ஒருவர் தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த 22 வயது நிரம்பிய திருமலை இளைஞன் ஜாக்சன் சாள்ஸ் அன்ரனியாகும்.

☆ 23.07.83: லெப்டினன்ட் உட்பட 13 சிறிலங்கா இராணுவ வீரர்கள் திருநெல்வேலியில் வைத்து விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகளில் ஒருவரான செல்லக்கிளியும் மரணமானார்.

● 24.07.83: யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவம் வெறியாட்டம். மாணவர்கள் உட்பட பலர் படுகொலை. கொழும்பிலும் தெற்கிலும் தமிழ்மக்களுக்கெதிரான பேரினவாதத் தாக்குதல்கள் ஆரம்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● 25.07.83: வெலிக்கடைச் சிறைச்சாலையில் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் உட்பட 35 தமிழீழ விடுதலைப் போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

● 27.07.83: வெலிக்கடைச் சிறையில் டாக்டர் ராஜசுந்தரம் உட்பட 18 போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

● 31.07.83: இனவெறியர்களின் தாக்குதலுக்குள்ளாகி பாரிசில் ஐயம்பிள்ளை மகேந்திரன் மரணம்.

★ 2.08.83: ஸ்ரீ.தே.க. யாழ். அமைப்பாளர் ராஜசூரியரும், அவரது மகனும் இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

● 14.08.83: தமிழீழத்தில் சிறீலங்கா அரச இயந்திரத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் போராட்டத்தை விஸ்தரித்து வந்த தமிழீழ விடுதலை இராணுவத்தின் செயலதிபர் தேவசேகரம் குலசேகரம் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

☆ 26.09.83: மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ. சங்கத்தில் 40,000 இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

★ 23.10.83: விடுதலைப் போராட்ட வரலாற்றில் திருப்பம் சமாக மட்டுநகர் சிறையில் சிறைவைக்கப்பட்ட 42 ஈழ விடுதலைப் போராளிகள் மீட்கப்பட்டனர்.

★ 14.10.83: துப்பாக்கி ஏந்திய இளைஞர்களால் யாழ்.தபாலகத்திலிருந்து 2 லட்சத்து 84 ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டது.

☆ 17.10.83: மட்டக்களப்புக் கச்சேரியில் 82 துப்பாக்கிகள் இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

☆ 7.11.83: புங்குடுதீவு மக்கள் வங்கிக் கிளையில் 1 லட்சத்து 44 ஆயிரம் ரூபா கொள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ 10.11.83: யாழ். 2ம் குறுக்குத் தெரு மீன்பிடிப் பயிற்சி நிலையத்தில் 3 படகு யந்திரங்கள், வோக்கி டோக்கி, புறொஜெக்டர், வெல்டிங் இயந்திரம் போன்றவை கொள்ளையடிக்கப்பட்டன.

☆ 14.11.83: யாழ். தபால் நிலையத்தில் 13 இலட்சம் ரூபா கொள்ளை. மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் 2 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா கொள்ளை.

☆ 8.12.83: மட்டுநகர் பல்கலைக் கழகக் கல்லூரியில் பரீட்சை வினாத்தாள்கள் கொள்ளை.

★ 14.12.83: கலவரம் காரணமாக இடம்பெயர்ந்த பல்கலைக் கழக மாணவர்கள் மேற்கொண்ட ஹர்த்தால் பூரண வெற்றி.

தோழர்களே!

தமிழீழ விடுதலை முன்னெடுப்பு முயற்சிகளில் ஒன்றாக இன்று விளங்கும் உங்கள் 'தமிழ் முரசு' மிகுந்த சிரமங்களைத் தாங்கியே வெளிவருகின்றதென்பதை நீங்கள் உணர்வீர்கள். எனவே இந்த விடுதலை முயற்சியை வளரவைக்கும் பொறுப்பு உங்களுடையதாகிறது.

தயவு செய்து தோழர்களே, 'தமிழ் முரசிற்கு' உங்கள் சந்தாப் பணத்தை இதுவரை செலுத்தாதோர் விரைந்து அனுப்புங்கள்... உங்கள் தோழர்களையும் தமிழ் முரசின் வாசகர்களாக்குங்கள். அனைத்துக்கும் மேலாக தமிழ் முரசை நெறிப்படுத்துங்கள்...

சகல தொடர்புகட்கும்...

The Editor,
"TAMIL MURASU"
TAMIL EELAM LIBERATION COUNCIL, (France)
10 rue des Martyrs, 75009 PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரகத்துப் பூக்கள்.

இருண்ட கூடாரங்களில்
சங்கிலிகளில், நரகத்து நிழலில்
எனது மக்களை சிறையிட்டுள்ளனர்.
வாய் மூடி இரும் என ஆணையிட்டுள்ளனர்.

அவர்கள் ஏதும் முறையீடு செய்தால்
இராணுவச் சவுக்கால்
சாவால், பசியால்
அச்சுறுத்தினார்.

அச்சுறுத்தியோர் சென்றனர் ஆயினும்
'நரகத்தில் மகிழ்வுடன் வாழ்க'
என்றே அவர்கள் கூறிச் சென்றனர்.

இந்த அநாதைக் குழந்தைகளை
உங்களால் பார்க்க முடிகிறதா?
ஆண்டாண்டுகளாக அவர்களும் துயரமும்
சகாக்களாய் இருந்தனர்
பிரார்த்தித்துக் களைத்தனர்
கேட்போர் இன்றி.

"குழந்தைகளே யார் நீங்கள்?
இப்படி உங்களை வருத்தியோர் யாவர்?"
"நாங்கள் நரகத்துப் பூக்கள்"
என்றனர் அவர்கள்.

- றஷீட் ஹுசைன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் அடக்குமுறை தொடர்கிறது! தொடர்ந்தும் கைதுகள்.....

கடந்த மாதம் மாத்திரம் மட்டுநகரில் 70க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் பலர் கொழும்பு முகாமாகிய வெலிக்கடைச் சிறைக்கும் மீதமானோர் கல்லடி இராணுவ முகாமிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

சமநீதி இயக்கத்தைச் சேர்ந்த 4 இளைஞர்கள் 2.1.84 அன்று ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டனர். மலையகத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் பரமேஸ்வரன், செம்புலிங்கம், முருகையா, கிருஷ்ணமூர்த்தி, செல்வராஜா, சதாசிவம் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் பலர் இராணுவத்தின் மூர்க்கத்தனமான சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனர்.

17.1.84 அன்று மட்டக்களப்பிலுள்ள பிரபல டாக்டர் ஜெயவேலும் அவரது 3 மகன்களும் கைது செய்யப்பட்டதுடன் அவரது வீடு சல்லடையாக தேடுதல் வேட்டைக்கு உள்ளானது. 15.12.83 அன்று திருமலை - யாழ். பஸ்ஸில் பயணம் செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி. சுலோசனா கனகலிங்கம் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரசுரத்தை வைத்திருந்ததாகக் கூறப்பட்டு கைது செய்யப்பட்டார்.

18.12.83 அன்று செட்டிகுளத்திலுள்ள கந்தோலக்கடம் ஆயுதப்படையினரின் பலத்த தேடுதல் வேட்டைக்கு உள்ளானது. இச்சம்பவத்தின்போது இப்பகுதி உதவி அரசாங்க அதிபர் ஜெகநாதன் உட்பட, கிராம சேவகர்கள், அதிகாரிகள் பலர் படையினரால் கோரமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் எந்த நிமிடத்திலும் உயிராபத்தை எதிர் நோக்க வேண்டிய நிலை தொடர்ந்து உருவாகிக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா

## ஆயுதக் குவிப்பில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தீவிரம்!

உலகெங்குமுள்ள தனது முதலாளித்துவப் பொறியமைப்புக்களும் தனது கைக்கூலியரசுகளும் முறிந்து கொட்டுப்படுவதைத் தடுக்க முடியாத அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகை விரைவில் போர் அழிவிற்கு இட்டுச் செல்லும் முயற்சியாக பெருமளவு ஆயுதங்களை தயாரித்துக் குவித்து வருகிறது. அமெரிக்க அரசின் 84ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத் துண்டு விழும் தொகை 200 பில்லியன் டொலர்களாக இருந்தபோதும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தினமும் உலகை அழிக்க வல்ல நியூக்கிளியர் குண்டுகளைத் தயாரிக்கிறது. அதுமாத்திரமல்ல இன்று 26,000 போர் விமானங்களை உடமையாகக் கொண்டுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் எதிர்வரும் 5 வருடங்களுக்கான ஆயுதத் தயாரிப்புக்காக 300 பில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது.

சீனா

## சீன அரசின் ஏகாதிபத்தியத்துடனான சமதான சகவாழ்வு!

தோழர் மாவோவின் தத்துவ சித்தாந்தங்களையெல்லாம் தூக்கியெறிந்து வரும் சீன அரசு இன்று பகிரங்கமாகவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அரவணைக்கும் கம்யூனிசத் துரோக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதனை சீனப்பிரதமர் சாவோ ஷியாங்கின் சமீபத்திய அமெரிக்க விஜயம் உறுதிப்படுத்தியுள்ளது. தமது வெள்ளைமாளிகை உரையின்போது சீனப் பிரதமர் அமெரிக்காவிற்கும் சீனாவிற்குமிடையிலான வேறுபாடுகளை களையப்பட்டுவிட்டதாகவும், இன்று தாய்வான தவிர்ந்த இதரவிடயங்களில் இருநாடுகளும் ஒன்றுபட்டே இருப்பதாகவும் கூறியுள்ளார். சிறிலங்காவில் ஜெயவர்த்தன அரசைப் பாதுகாப்பதில் இருநாடுகளும் ஒன்றுபட்டு இயங்கிவருவது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலெபனானுக்கான படைகளை பிரான்சு குறைக்கிறது!

சமாதானப் படைகள் என்ற போர்வையில் லெபனானை பிரெஞ்சு - அமெரிக்க - பிரித்தானிய - இத்தாலியப் படைகள் ஆக்கிரமித்திருப்பது தெரிந்ததே. இந்த ஆக்கிரமிப்புக்கு எதிரான கொரில்லா, மற்றும் தற்கொலைப் படையினரின் தாக்குதல்களில் ஏற்பட்டுவரும் பெருமளவு உயிர்ச் சேதங்கள் மேற்படி நாடுகளை நிலைகுலையச் செய்துள்ளன. அதேவேளை மேற்படி நாடுகளின் மக்களை அரசுகட்கு எதிராகக் கிளர்ந்தெழவும் செய்துள்ளது. இவ்வெதிர்ப்புக்களின் விளைவாக பிரெஞ்சு அரசாங்கம் இலெபனானில் நிலைகொண்டுள்ள தனது படைகளில் 1/4 பகுதியினரை மீள அழைக்கப்போவதாக அறிவித்துள்ளது.

## வேலை நிறுத்தப் பட்டமைக்கு எதிராக தொழிலாளர்கள் போராட்டம்!

பிரபல மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனமான தல்போ (TALBOT) தனது பொய்சி வேலைத்தளத்திலிருந்து 17,000 தொழிலாளர்களை சம்பளம், நட்ட ஈடு எதுவுமே கொடுக்காமல் வேலையிலிருந்து நீக்கியதை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவுத் தொழிற்சங்கமாகிய CGT பெரும் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டது. வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர்கள் பெரும்பான்மையாக வட ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்களாகும். ஏற்கனவே பிரான்சில் அதிகரித்து வரும் இனபேதம் இச்சம்பவத்தால் மேலும் பெரிதுபட்டுள்ளது. அதேவேளையில் CGT யின் தொடர்ந்த போராட்டம் ஆளும் சோசலிசக் கட்சிக்கும் அதன் கூட்டுக்கட்சியான கம்யூனிசக் கட்சிக்குமிடையில் பெரும் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேல்:

### நெருக்குவாரத்தின் மத்தியில் இஸ்ரேல் அரசாங்கம்!

முறிந்து கொட்டிவிடும் அளவிற்கான நெருக்குவாரநிலையை இஸ்ரேலின் சியோனிச அரசு அடைந்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவு இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் எதிரொலித்துள்ளது. இம்முறை துண்டு விழும் தொகை 845 மில்லியன் டொலர்களாகும். இதன் காரணமாக கல்வி, பாதுகாப்பு அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடுகள் நிதியமைச்சரால் வெட்டப்பட்டுள்ளமை இஸ்ரேலிய அமைச்சரவையில் பிளவை ஏற்படுத்தியுள்ளன. நாட்டின் பணவீக்கம் 200% மாகவும் வெளிநாட்டுக்கடன் 26 பில்லியன் டொலர்களாகவும் இருக்கின்றது. அதேவேளையில் ஊதிய உயர்வுகோரி தடைசெய்யப்பட்டதற்கு எதிராக தொழிலாளர்கள் நாடுமுழுவதும் வேலை நிறுத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாலஸ்தீனம்:

### ஃபாத் பிரிவுத் தலைவர்கள் அரபாத்துக்கு ஆதரவு!

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் ஃபாத் பிரிவைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட முக்கிய தலைவர்கள் பாலஸ்தீன மக்களின் போராட்டம் தொடர்பான யசீர் அரபாத்தின் நிலைப்பாட்டை பூரணமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். சமீபத்தில் திரு. அரபாத் எகிப்திய ஜனாதிபதி முபாரக்குடன் மேற்கொண்ட சந்திப்பை நியாயப்படுத்திய இவர்கள், சிரிய-லிபிய துணையுடன் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சீர்குலைக்க மேற்பட்ட சதிகளை வன்மையாகச் சாடியுள்ளனர். அரபாத் எதிர்ப்பாளர்களுக்குத் தலைமைதாங்கிய அபுமூஸா, அபுசலே ஆகியோரை வன்மையாகக் கண்டித்த இவர்கள், தலைமைப்பீடத்துக்கு சுதந்திரமான முடிவுகளை எடுக்கும் உரிமை உள்ளதையும் அங்கீகரித்துள்ளனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' இந்திரா எச்சரிக்கை!

'முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பாதுகாப்புச் செலவுகள் மிகவும் உயர்ந்துள்ளன. எமது அபிவிருத்தி முயற்சிகளைத் தளர்த்தாமல் இந்தச் சவால்களை நாம் திடத்துடன் எதிர்நோக்க வேண்டும். பொருளாதார, அரசியல் சவால்களை எதிர்நோக்க ஒன்றுபட வேண்டும்' என்றும் நாட்டு மக்களுக்கு வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தமது காங்கிரஸ் கட்சி ஆட்சியின் மூன்றாவது வருட ஆரம்பத்தை முன்னிட்டு உரையாற்றிய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நாட்டு மக்களை எச்சரித்துள்ளார். தேர்தல்கள் குறித்து தமது உரையில் எதுவுமே அவர் குறிப்பிடவில்லை.

## சோவியத் பாதுகாப்பமைச்சர் இந்தியா வருகிறார்.

சோவியத் பாதுகாப்பமைச்சர் மார்ஷல் உஸ்ரினோவ் விரைவில் இந்தியாவுக்கு விஜயம் செய்வார். இருநாடுகளுக்கு மிடையிலான உயர்மட்டப் பேச்சுவார்த்தையின் ஒருபகுதியாகவே இவ்விஜயம் நடைபெற இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இது குறித்த அழைப்பை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமன் மாஸ்கோவுக்கு விஜயம் செய்தபோது விடுத்திருந்தார். சோவியத் பிரதிப் பாதுகாப்பமைச்சர் கடந்தவருடம் இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்தியப் பாதுகாப்புத் தளங்களைப் பார்வையிட்டது தெரிந்ததே. இந்த விஜயத்தை மேற்கொள்ளவிருக்கும் மார்ஷல் உஸ்ரினோவ் இந்தியப் பிரதமருடனும் பேச்சுவார்த்தை நடத்துவார் என இந்தியப் பத்திரிகைகள் கூறியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ விடுதலை இயக்க (TELO) செயலதிபர் தோழர் சிறீ சபாரத்தினத்துடன் ஒரு கலந்துரையாடல்.

தங்கத்துரை, குட்டிமணி ஆகியோரின் மறைவுக்குப் பின்னர் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலதிபராக செயற்பட்டுவரும் தோழர் - சிறீ சபாரத்தினம் ஜனவரி 15ந் திகதி தொடக்கம் 26ம் திகதி வரை ஐரோப்பாவுக்கான வருகையை மேற்கொண்டபோது அவருடன் 'தமிழ் முரசு' 'எண்ணம்' இதழ்களின் ஆசிரியர்கள் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது எழுப்பப்பட்ட கேள்விகளும் அதற்கான பதில்களும். இச் சந்திப்பு மேற்கு ஜேர்மனியில் இடம்பெற்றது.

• **தமிழ்முரசு:** தலைவர்கள் தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் கைது செய்யப்பட்ட பின்னர் TELO இயக்கத்திற்கு ஏற்பட்ட இன்னல்கள் யாவை? அவற்றை எவ்வாறு எதிர் கொண்டீர்கள்?

**தோழர் சிறீ:** "தலைவர்களது கைது எம்மைக் கதிகலங்க வைத்தது. அவர்களுக்கு ஏதாவது நடந்தாலும்கூட இயக்கத்தை தொடர்ந்து நடத்தக் கூடிய வகையிலே அவர்கள் எம்மைப் பயிற்றுவித்திருந்தார்கள். அவர்கள் சிறைப்பட்டது தற்காலிகமானதென்றே எண்ணினோம். சிறையில் இருந்தும் தலைவர்கள் அவ்வப்போது அறிவுறுத்தல்களைச் செய்து கொண்டிருந்தனர். இதனை நாம் பிரச்சினைகளை எதிர்கொண்டு இயக்கத்தை கட்டி வளர்க்கக் கூடிய நிலை ஏற்பட்டது. தலைவர்கள் கைது செய்யப்பட்ட அடுத்த சில நாட்களிலேயே எமது இயக்கத்தைக் குலைக்கும் வகையில் சிலர் நடந்துகொண்டனர். எமது இயக்கம் காற்று, மழைக்கு தாங்கக் கூடிய இயக்கமாகக் கட்டியெழுப்பப்பட்டபடியால் இவற்றை நாம் எதிர்கொண்டோம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• **எண்ணம்**: தமிழீழப் போராட்டத்தை 10 வருடங்களுக்கு மேலாக முன்னெடுத்துச் சென்ற அநுபவமும், இராணுவ உணர்மையும் கூடிய தலைவர்கள் தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் எவ்வாறு இவ்வளவு இலகுவில் கைது செய்யப்பட்டனர்?

**தோழர் சிறீ**: "இவர்களுடைய கைது ஒரு உளவாளியால் காட்டிக் கொடுக்கப்பட்டதே. இவ்வுளவாளியையும் அவனின் அரசியல் பின்னணியையும் வெளிக் கொணருவதற்கான பிரயத்தனங்களை நாம் எடுத்து வருகிறோம். 10 வருடங்களுக்கு மேலாக விடுதலை இயக்கத்தைக் கட்டுக்கோப்பாக வளர்த்த அநுபவத்தை தம்மகத்தே கொண்ட எமது தலைவர்களை சிறிலங்கா அரசு பலகாலமாக முயற்சித்தும் அது முடியாமலே இருந்து வந்தது. உயர் அதிகாரிகள் இவர்களது நடமாடும் இடங்களை அறிந்து கைது செய்யும்படி அனுப்பியும் கூட பொலிசார் கைது செய்ய முயற்சிக்காமலே திரும்பிச் சென்ற சம்பவங்களும் உண்டு. மக்களுடன் கரைந்திருந்ததும், மக்களுக்கு இவர்கள் மேல் இருந்த அபிமானமுமே இவர்களைக் காப்பாற்றியது. எமது தலைவர்கள் கைதாகக் காரணமான உளவாளியை தமிழ்மக்களிடையே தொடர்ந்து நடமாட அனுமதித்துக் கொண்டு தமிழீழத்தை எடுப்பது என்பது எங்ஙனமும் சாத்தியமாகாது."

• **தமிழ்முரசு**: `தனி நபர் பயங்கரவாத நடவடிக்கைகள்" மூலம் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க முடியுமா?

**தோழர் சிறீ**: "முடியாது! அனைத்துத் தமிழ்மக்களும் ஒன்றிணைந்து போராடி நிர்மாணிக்க வேண்டிய தமிழீழத்தை நாலைந்து பேரின் துணிகரச் செயலினால் சாதித்துவிட முடியாது. ஒருகால கட்டத்தில் நாமும் இதேபோன்ற செயல்களைச் செய்தோம். அந்த நாட்களில் நாம் இச்செயல்களில் ஈடுபட்டபோது பொலிசார் ஆயிரக்கணக்கில் மக்களை அழிக்கவில்லை. மாறாக இச்செயல்களில் ஈடுபட்ட எம்மையே தேடி அழிக்க முற்பட்டனர். 'தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளின்' போது அரசாங்கம் எடுத்த பிரதி நடவடிக்கைகள் எம்மை ஒட்டுமொத்த வெகுஜனப் போராட்டத்திற்கு தயாராக வேண்டிய நிலைமைகளைச் சிருஷ்டித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• **எண்ணம்:** அரசியல் கருத்து வேறுபாடு கொண்டவர்களை சரீர ரீதியில் அழிப்பதன் மூலம் பிரச்சனைகளைத் தீர்த்துவிடலாம் என TELO நம்புகிறதா?

**தோழர் சிறீ:** "இல்லை! ஒரு விடுதலை இயக்கத்தைக் கட்டிவளர்த்துக் கொண்டு போகும்போது இடையிடையே கருத்துவேறுபாடுகளும் பகைப் போக்குகளும் தோன்றி மறைவது இயற்கையே. இதை அனைத்து இயக்க அங்கத்தவர்களின் பொது முயற்சியிலும், கருத்துச் சுதந்திரத்திற்கு உத்தரவாதமுள்ள தொடர்ந்த கலந்துரையாடலினூடும் ஏகமனதாக்கிவிடலாம். கருத்து முரண்பாடுகள் இயக்க வளர்ச்சியின் பிரதிபலிப்பே. சமுதாயம் தூங்கிக் கொண்டிருக்கும் போது, விடுதலைச் சுமையை தாமே ஏற்பதற்காக விடுதலை இயக்கத்தினுள் சேர்ந்து பலகாலம் இணைந்து இயங்கிய சக தோழர்கள் சிற்சில அரசியல் நெருக்கடிகளின் தாக்கங்களினால் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்தார்கள் என்பதற்காக அவர்களைச் சரீரரீதியில் அழிப்பதென்பது அரசியல் வறுமையாகும்."

• **தமிழ் முரசு:** மாநில சபைகள் குறித்து TELO வின் நிலைப்பாடு என்ன?

**தோழர் சிறீ:** "மாநில சபைகளை நாம் முற்று முழுதாக நிராகரிக்கிறோம். தமிழீழத்தைத் தவிர்ந்த மற்றைய பிரதியீடுகள் எதையும் நாம் ஒருபோதும் ஏற்கவில்லை. தமிழீழம் தவிர்ந்த மற்றைய பிரதியீடுகளை நாம் ஏற்போமானால் மறைந்த எமது தலைவர்களுக்கும், தமிழீழப் பிரயத்தனத்திலே மறைந்த மற்றைய தோழர்கட்கும், இன்று அகதிகளாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கும் நாம் துரோகம் செய்தவர்களாவோம். மாநில சபைகள் தமிழ்மக்களது எந்தப் பிரச்சினையையும் தீராது. கடந்த கால அரசாங்கங்கள் ஒவ்வொரு நெருக்கடியின் போதும் கொண்டுவந்த தீர்வுகளும், அறிவித்த அபிவிருத்திப் பிரேரணைகளும் எந்த மட்டத்திற்கு தமிழ்மக்களது வாழ்வை இலகுவாக்கியது என்பதை தமிழ்மக்கள் அறிவர். மாறாக தமிழ்மக்களது வாழ்க்கைத்தரம் வெட்டிவீழ்த்தப்பட்டதோடு, தமிழ்மக்கள் உயிர் வாழ்வதற்கான உத்தரவாதமும் இல்லாத நிலைகள் வளர்ந்து சென்றதோடு கடைசியாக நடந்த இனப்படுகொலையில் 2000க்கும் மேலான தமிழ்மக்கள் கொல்லப்பட்டதானது அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடும் எந்தக் காட்டுமிராண்டித்தனத்தையும் தட்டிக் கேட்க யாருமில்லை என்ற மனோபாவத்தோடு செயற்பட்டதை தெளிவாக்கியது. தமிழ்மக்கள் மீதான அடக்குமுறையை எதிர்கொள்ளவல்ல ஒரு பலமான ஸ்தாபனத்தை உருவாக்க வேண்டும். இந்த ஸ்தாபனம் [illegible] தமிழீழத்திலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமை பெறும். இந்தப் பரிணாமத்தினூடேதான் தொழிற்சாலைகளை நிர்மாணிக்கவும், தமிழ் மக்களது அடிப்படை வாழ்வுக்கு உத்தரவாதமளிக்கவும், அவர்களது வாழ்வை சுபீட்சமாக்கவும் வல்ல வேலைத்திட்டங்களை நிறைவேற்ற முடியும். சுதந்திரத் தமிழீழத்திலுள்ள தமிழ் மக்களது மனோவியலே யாதொரு அபிவிருத்தித் திட்டத்திற்கும் செயல்வடிவம் கொடுக்கக் கூடிய வகையில் இணைந்து செல்லும்."

- <u>எண்ணம்</u>: தமிழ் ஈழப் போராட்டத்தில் உங்களது நேசசக்திகளாக யாரைக் கருதுகிறீர்கள்?

<u>தோழர் சிறீ</u>: "ஐ.தே.க. அரசாங்கத்திற்கெதிராகப் போராடும், தமிழீழத்தை நடைமுறையில் அங்கீகரித்த அனைத்துச் சக்திகளையும், ஐ.தே.க.வின் எஜமானர்களாகிய அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களுக்கெதிராகப் போராடும் தொழிலாள வர்க்கக் கட்சிகளையும், தொழிற்சங்கங்களையும், காலனித்துவ, நவகாலனித்துவத்திற்கெதிராகப் போராடும் விடுதலை இயக்கங்களையும் நாம் எமது நேசசக்திகளாகக் கருதுகிறோம்."

- <u>தமிழ் முரசு</u>: உங்களது இராணுவத் தயாரிப்புக்கள் தற்சமயம் எந்தக் கட்டத்தை வந்தடைந்திருக்கின்றன?

<u>தோழர் சிறீ</u>: "மறைந்த எமது தலைவர்களான தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் அரசியல் வாழ்வுக்கு வருமுன்னர் தமிழ் மக்கள் ஒரு இராணுவத்தைப் படைக்கச் சக்தியற்றவர்களென்ற எண்ணக்கரு நிலவிவந்தது. அந்த நாட்களில் தமிழ் மக்கள் போராட்டக் குணம் குறைந்த சாந்தமானவர்களாகவே இருந்தனர். அந்த நாட்களிலேற்பட்ட தமிழ் மக்களது தொடர்ந்த தோல்விகள் இதைப் பொதுமைப் படுத்தத் தக்கதாகவே இருந்தது. அந்த நாட்களிலே அரசியல் வாழ்வுக்கு வந்த தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் அரசின் ஒடுக்குமுறைக்கெதிராக தமிழ் மக்களது சத்தியாக்கிரகம் போன்ற தோல்விகளுக்கு மத்தியில் நின்றதால் ஓர் இராணுவத்தை தோற்றுவிக்க நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். தமிழ் மக்களது தொடர்ந்த தோல்விகட்கு மத்தியில் இவர்களது முன் முயற்சியும், விட்டுக்கொடாத பிரயத்தனமும் தமிழ் ஈழ விடுதலை இயக்கமாக உருவெடுத்தது. இந்த நாட்களில் நாம் நடைமுறைத் தடைகளால் சூழப்பட்டிருந்தோம். குறிப்பாக ஒரு இராணுவத்தை படைக்கத் தேவையான இராணுவ நிறைவேற்றுனர்களையும், இராணுவ உபகரணங்களையும் பெற்றுக்கொள்ளும் நடைமுறைத் தடைகளின் மத்தியில் தமிழினம் பூண்டோடழியும் நிலை நெற்றிக்கு நேர் [illegible] தடைகளை வெற்றி கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகளும் மெல்ல மெல்ல திறபட்டுச்சென்று தமிழ் ஈழவிடுதலை இயக்கம் மக்கள் மத்தியில் வேரூன்ற ஆரம்பித்தது. அக்காலத்தில் தமிழினத்தின் அடிமைத்தனத்தை அனுமதித்து வாழ்ந்தவர்களும், சட்டை செய்யாதவர்களும் ஆன ஒரு பகுதியினரும் அடிமைத்தனத்தை அறவேயும் அனுமதியாத போர்க்குணம் கொண்ட மற்றொரு பகுதியினருமாக தமிழ் சமுதாயம் இரண்டுபட்டிருந்தது. தலைவர்கள் இந்தப் போர்க்குணம் மிக்க பகுதியினரில் ஒரு பகுதியினரைத் தேர்ந்தெடுத்து நாம் எதற்காக ஆயுதம் ஏந்தவேண்டும் என்ற தத்துவார்த்த அடித்தளத்தை இட்டனர். இதுவே தமிழினத்திற்கான இராணுவத்தின் கருவாக அமைந்தது. இக்கருவானது, தொடர்ந்துவந்த அரசியல் நெருக்கடிகளில் அடிபட்டு, நெரிபட்டு பல நூறுபேரைக் கொண்ட கட்டுக்கோப்பான இராணுவ அமைப்பாக திரட்சியுற்றது. இன்று இதனுள்ளே ஏறத்தாழ நாலவித இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவல்ல பயிற்றப்பட்ட போராளிகள் இருப்பதோடு இதன் அரசியல் அமைப்பானது இராணுவ அமைப்புக்குச் சமாந்தரமாக தமிழ் ஈழத்தில் பரவலாக்கப்பட்டும் செல்கிறது.

● **எண்ணம்:** TELO இயக்கத்திற்கும் திரு. சந்திரகாசனுக்குமிடையேயுள்ள உறவென்ன?

**தோழர் சிறீ:** "திரு. சந்திரகாசன் TELO இயக்கத்தைச் சேர்ந்தவரல்ல. அவர் வேறு ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர். அவர் TELO இயக்கத்திற்கு கடந்த காலங்களில் சில உதவிகளைச் செய்துள்ளார்."

● **தமிழ் முரசு:** திருகோணமலை துறைமுகத்தில் அமெரிக்க இராணுவத்தளம் அமையவிருப்பது தமிழீழப் போராட்டத்தைக் கட்டுப்படுத்துமா...?

**தோழர் சிறீ:** "இது தமிழீழப் போராட்டத்திற்கு மாத்திரமன்றி இந்திய உபகண்டத்திற்கே அச்சுறுத்தலாகும். அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் கஸ்பர் வைன் பேர்கர் அண்மையில் இலங்கைக்குத் திடீர் விஜயம் செய்ததும், அமெரிக்க யுத்தக்கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்து சென்றதும், பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் திருமலைத் துறைமுகத்தைப் பார்வையிட்டதும், பிரித்தானியாவினால் உலக யுத்த காலங்களில் பாவிக்கப்பட்ட எண்ணெய்க் கிடங்குகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு வாடகைக்கு விடப்பட்டதும் அரசியல் பிரக்ஞை பூர்வமாக செயற்படுபவர்களால் ஒரு ஏகாதிபத்திய சதியின் முன்னேற்பாடுகளாகவே கணிக்கப்படக்கூடியது. இந்தியாவின் தொழிற்துறை வளர்ச்சியானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக ஏகாதிபத்திய நாடுகளுக்கு சந்தை நெருக்கடியை ஏற்படுத்தி அவற்றை பொருளாதாரப் போட்டியிற்கு இட்டுச் செல்லுதல் இந்தியாவை மீண்டும் காலனியாதிக்கம் செய்ய வேண்டிய சதியும் இதில் அடங்கியுள்ளது."

• **எண்ணம்:** ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்கள் எண்ணிரிதியில் பங்கு செலுத்த வேண்டுமென TELO எதிர்பார்க்கின்றது?

**தோழர் சிறி:** "தமிழ் மக்களின் அறிவு ஜீவிப் பகுதியினரில் பெரும்பான்மையோர் ஐரோப்பாவிலேயே வாழ்கின்றார்கள். தமிழ் ஈழப் போராட்டத்திற்கான அவைய தேவையை இவர்களாலேயே ஈடு செய்ய முடியும். விடுதலைக்குத் தேவையான புறநிலை காரணிகளை தமிழ் மக்கள் அறிந்து கொள்வதற்கான அறிவூட்டலை உயர்த்துவதற்கு இவர்களின் பங்கு இன்றியமையாததாகும். ஐரோப்பிய நிதி மேலாண்மையின் சக்திகளையும், இங்கிருந்து கிட்டப்படும் அரசியல், இராணுவச் சக்திகளையும் தமிழ்மக்களிடம் கொண்டு வருவதற்காக ஐரோப்பிய முற்போக்குச் சக்திகளுடன் செயற்படுவது முதற் கொண்டு, தமிழ் மக்களின் மீதான இலக்குமுறையை பாலஸ்தீன, எல்சல்வடோர் போராட்டங்களுடன் சேர்ந்து சர்வதேச சமூகத்திடம் கொண்டுவரவும், சர்வதேச சமூக சக்திகளுடன் ஆத்மீகப் பிணைப்பை ஏற்படுத்துவதற்கான கருத்துரையாடல்களை, அரசியல் நடவடிக்கைகளைச் செய்ய ஐரோப்பியத் தமிழர்களின் பங்கு இன்றியமையாததாகும். குறிப்பாக தமிழ் ஈழத் தேசிய இனத்தை சர்வதேச சமூகத்திலிருந்து ஐ.தே.க.வின் சேறடிப்புக்களாலும், ஏகாதிபத்தியத்தின் சதிகளாலும் தனிமைப்படுத்த விடாது தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பாதுகாக்கவும், வளர்த்தெடுக்கவும் வேண்டி எமது போராட்டத்தை சர்வதேச சமூகத்துடன் கரைப்பதென்ற இந்திப் போட முடியாத கடமையை TELOவின் நேச சக்திகள் ஏற்றுச் செயற்படவேண்டும். ஐரோப்பிய நாடுகளிலே TELOவிற்கு அரசியல் உணர்வுள்ள நேச ஸ்தாபனங்கள் இல்லையெனில் தமிழீழ விடுதலைக்குத் தேவையான வெகுஜன இயக்கத்தைக் கட்டி வளர்ப்பது எவ்வாறும் சாத்தியமாகாது. இந்நேச சக்திகளின் பொருளாதார சுதந்திர பங்களிப்புகள் இல்லையெனில் தமிழ் ஈழம் ஒரு போதும் யதார்த்தமாகாது."

• **தமிழ் முரசு:** 'தமிழ் ஈழ விடுதலைப் பேரவை' (பிரான்சு) பற்றியும் 'தமிழ் முரசு' பற்றியும் உங்களது அபிப்பிராயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோழர் சிறீ:** "பேரவையின் அதிகமான செயற்பாடுகளை நாம் தமிழ் முரசு மூலமே அறிகிறோம். 'தமிழ் முரசு' தற்காலத்தில் தோன்றிய அரசியல் பிரச்சார இலக்கியங்களில் ஓர் சிறந்த பத்திரிகையாகும். அதில் காலத்துக்குக் காலம் வரும் செய்திகளும் கருத்துகளும் தமிழ்மக்களை அரசியல் துயிலில் அமிழவிடாது விடுதலைப் பதாகையை உயர்த்திப் பிடித்துள்ளது. அதன் வெளியீட்டாளர்களதும், பங்காளர்களதும் விடுதலைப் பங்கானது இன்று மறைகாயாகத் தோன்றினும் வரலாற்றால் அங்கீகரிக்கப்பட்டே தீரும். தமிழ் முரசை ஒரு உணர்வு பூர்வமானதும், அறிவு பூர்வமானதுமான பத்திரிகையாக வளர்த்தெடுப்பதுவேயே தமிழ் ஈழப்போராட்டத்திற்கு உரமூட்டலாம். TELOவை தமிழ் சமூகத்திலிருந்து தனிமைப்பட விடாமலும், பொய்ப்பிரச்சாரங்களிலிருந்தும் காப்பாற்றி வந்தமைக்கு TELOவும், தமிழ்மக்களும் தங்களுக்கு கடமைப்பாடுடையவர்களாகவே இருப்பார்கள். பேரவைக்கு TELOவின் புரட்சிகர வாழ்த்துக்கள் உரியதாகுக."

● **எண்ணம்:** 'தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழு' பற்றியும் 'எண்ணம்' ஏட்டைப்பற்றியும் உங்களது அபிப்பிராயம் என்ன?

**தோழர் சிறீ:** தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஓர் இறுக்கமான சர்வதேச சம்பந்தம் இன்றியமையாதது என்ற பிரச்னையை தமிழ் சமூகத்திற்கு அறிமுகம் செய்த பெரும் பங்கு த.ஈ.ச.ச. குழுவையே சாரும். 'எண்ணம்' ஏடானது TELOவை தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்த காரணிகளில் குறிப்பிடக்கூடியதாகும். 'எண்ணத்தினது' பொருளாதார ஆய்வுகளும், அரசியல் மதிப்பீடுகளும் அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளையும், விடுதலை இயக்கங்களின் செயற்பாடுகளையும் தமிழ்மக்கள் அறியத்தருதற்குத் துணை நிற்கின்றது. 'எண்ணம்' ஏட்டை தமிழ் மக்கள் வளர்ப்பார்களாக! தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழுவிற்கு TELOவின் புரட்சிகர வாழ்த்துகள் உரித்தாகுக.

---

தோழர்களே!

சென்ற தமிழ் முரசு (தை) இதழின் பின் அட்டைப் படத்தை ஒட்டிய வாக்கியங்கள் இனவாதத்தைக் கிளறும் வகையில் அமைந்ததற்காக உங்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

ஆ-ர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களுடைய இரவு

- ஊர்வசி.

நிழலே இன்றி
வெயில் தகிக்க
நீளும் பகல் பொழுதில்
தனியாக ஒரு காகம்
இரங்கி அழுகிறது...!

வேலி முருங்கையும்
மௌனமாய் இலையுதிர்க்கும்
அரவமொடுங்கிய
நள்ளிரவுகள்.
ஆள் காட்டி மட்டும்
ஒற்றையாய்க் கூச்சலிடும்.
சேவற் கொடியில்
அவனது வேட்டி ஆடும்..
நெஞ்சில் திகில் உறையும்
விழித்தபடி தனித்திருத்தலில்
மனம் வெந்து தணிக்கும்

அன்றைய முன்னிரவில்
நெஞ்சில் ஆழப் பதிந்தவை
மீண்டும் கருக் கொள்ளும்;
அச்சம் சுண்டியிழுக்கும்.

அந்த இரவின் இருள் வெளியே
உறைந்து கிடந்தது.
ஐந்து ஜீப்புகள் ஒன்றாய்ப் புழுதி கிளப்பின.
சோளகம் விசிறி அடித்தது;
என் ஆழ் மனதில் அச்சம் திரளாய்
எழுந்து புரள, அவனை இழுத்துச் சென்றனர்
பல்லிகள் மட்டும் என்னவோ சொல்லின..
உறைந்த நகரமும் அஞ்சியஞ்சி மௌனமாய்
சடசடத்தது. காலைச் சுற்றிய குழந்தை
வீறிட்டு அழுதது; 'விடுப்பு'ப் பார்க்க அயலவர் கூடினர்.
நீட்டிய துவக்குகள் முதுகில் உறுத்த அவன்
நடந்தான் அவர்களுடன். அந்த இரவில்,
ஒன்பது துவக்குகள் ஏந்திய கரங்கள் என்னுள்
பதிந்த சுவடுகள் மிகவும் கனத்தவை...
அந்த இரவு அவர்களுடையது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org